<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>
<u>முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,</u>
<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>

<u>2021 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வியாழக்கிழமை</u>
<u>ஐ.ஏ.எண்.**1/2021** இன் அ.வ.எண்.**349/2018**</u>

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சாமளாபுரம், மேற்கு வீதி, கதவு எண். 56A-ல் வசிக்கும் சுமார் 45 வயதுடைய சண்முகவேல் மகன் A.S.செல்வகுமார்.

... மனுதாரர் / வாதி

/எதிர்/

கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, அங்கலக்குறிச்சி அஞ்சல், வால்பாறை மெயின் ரோடு க/எண்.10/352-ல் வசிக்கும் லேட்.N.ஜானகிராமன் மனைவி J.செல்வநாயகம்.

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 22.09.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பிரபு அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசண்முகம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

மனு தாக்கல் நாள் : 12.03.2021

இம்மனுவானது ஆணையுறுதி ஆவணத்தில் கண்டுள்ள காரணங்களுக்காக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து, நில அளவையர் மூலம் மனுச் சொத்துக்களின் பௌதீக தன்மை மற்றும் அதன் நான்குபுற எல்லைகளை அளவீடு செய்து வரைபடத்துடன் கூடிய

அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இறுதி உத்தரவு**

1. இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

**செலவுத்தொகை பட்டியல்**

| மனுதாரர் தரப்பில் | எதிர்மனுதாரர் தரப்பில் |
|---|---|

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

**சொத்துவிபரம்**

**'A' ஷெட்யூல் :-**

கோவை பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அங்கலக்குறிச்சி கிராமம் புலத்தில், நத்தம் எண்.157/C1 நெ.காலைக்கு புதிய புல எண்.382/12-ல் அமைந்துள்ள மனையிடத்தில் ஓர் பகுதிக்கு எல்லைகளும், அளவுகளும்,

| | |
|---|---|
| கோபால்சாமி வீட்டிற்கும் | ...வடக்கு |
| கவுண்டப்பகவுண்டர், சுப்பேகவுண்டர் வீட்டுக்கும் | ...கிழக்கு |
| செல்வநாயகத்திற்குப் பாத்தியப்பட்ட, 1 செண்ட் இடத்திற்கும், கருப்பையா காந்திக்கு பாகசாசனப்படி பாத்தியப்பட்ட இடத்திற்கும், கிருஷ்ணசாமி வீட்டிற்கும் ஆக இவைகளுக்கும் | ...மேற்கு |
| கிழமேல் ரோட்டிற்கும் | ...தெற்கு |

இதன் மத்தியில்,

வடபுறம் கிழமேல் ... 12 அடி 9 அங்குலம்
தென்புறம் கிழமேல் ... 46 அடி
கிழபுறம் தென்வடல் ... 117 அடி 3 அங்குலம் (81+கிராசாக 36.3)
மேல்புறம் தென்வடல் தென்மேற்கு
மூலையிலிருந்து வடக்கு நோக்கி ... 76 அடி
அதிலிருந்து கிழக்கு நோக்கி ... 34 அடி
அதிலிருந்து வடக்கு நோக்கி ... 39 அடி 6 அங்குலம்

இந்த அளவுள்ள 4357 சதுரடி அல்லது 404.85 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடமும், ஷை இடத்திற்கு மாமூலாக போகவர உண்டான மாமூல் வழிநடை தடம் மற்றும் முன் மூல ஆவணங்களின்படி உண்டான மாமூல் பாத்தியங்களும் சகிதம்.

'**B**' ஷெட்யூல் :-

கோவை பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அங்கலக்குறிச்சி கிராமம் புலத்தில், நத்தம் எண்.157/C1 நெ.காலைக்கு புதிய புல எண்.382/12-ல் அமைந்துள்ள மனையிடத்தில் ஓர் பகுதிக்கு எல்லைகளும், அளவுகளும்,

கிருஷ்ணசாமி இடத்திற்கும் ...வடக்கு
இன்று (01.08.2018) கிரையம் பெறும்
உங்கள் (A.S.செல்வகுமார்) மனையிடத்திற்கும் ...கிழக்கு
தென்வடல் ரோட்டுக்கும் ...மேற்கு
செல்வநாயகத்திற்குப் பாத்தியப்பட்ட
1 செண்ட் இடத்திற்கும் ...தெற்கு

இதன் மத்தியில்,

வடபுறம் கிழமேல் ... 20 அடி
தென்புறம் கிழமேல் ... 29 அடி
மேல்புறம் தென்வடல் ... 61 அடி
கிழபுறம் தென்வடல் ... 62 அடி

இந்த அளவுள்ள 1464 சதுரடி அல்லது 136.03 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடமும், ஷை இடத்திற்கு மாமூலாக போகவர உண்டான மாமூல் வழிநடை தடம் மற்றும் முன் மூல ஆவணங்களின்படி உண்டான மாமூல் பாத்தியங்களும் சகிதம்.

மேற்படி, சொத்துக்கள் ஆனைமலை பேரூராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ளது.

இவ்வுத்தரவு 2021ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- P. சுபாஷினி**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.